# பென்குயின்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

கருப்பு வெள்ளை நிறமும்

கால் இரண்டும்

இறகு போன்ற கை இரண்டும்

உள்ள உயிரினம்

அசைந்து அசைந்து நடக்கும்

வேகமாக நீந்தும்

பனியின் மேலே சருகும்

பென்குயின்


பற்றி அறிந்து கொள்வோம் வாருங்கள்.

பென்குயின்கள் கடற்கரைப் பகுதியில் அதிகம் வாழ்கின்றன. இருப்பினும் எல்லா கடற்கரையிலும் பென்குயினைக் காண இயலாது.




வாத்து போன்ற நடையைக் கொண்ட பென்குயின்கள் நீரில் நீந்தும், பனியின் மீது சருகும்.





தோற்றத்தில் மட்டும் அல்லாமல் தங்கள் வாழ்விடம் மற்றும் கூட்டு வாழ்க்கை முறை மூலமும் பென்குயின்கள் அனைவரையும் கவர்கின்றன. பென்குயின்கள் பனிப்பிரதேசமான அண்டார்டிகா (Antarctica), தென் அமெரிக்கா (South America), ஆப்பிரிக்கா (Africa), ஆஸ்திரேலியா (Australia) மற்றும் கிழக்கு பசிபிக் பகுதியில் (Eastern pacific)உள்ள



தீவுகளில் ஒன்றான கலாபகோஸ் தீவிலும் (Galapagos) வாழ்கின்றன. இங்கு வாழும் பெங்குயின் கலாபகோஸ் பெங்குயின் (Galapagos penguin) என்றும், ஈக்வடார் பெங்குயின் (Ecuador penguin) என்றும் அழைக்கப்படுகின்றன.



கலாபகோஸ் பெங்குயின்
(Galapagos penguin)



ஈக்வடார் பெங்குயின்
(Ecuador penguin)

# பென்குயின் அதிகம் காணப்படும் பகுதிகள்




அண்டார்டிகா



எம்பரர் பென்குயின்
(Emperor penguin)



தென் அமெரிக்கா



மாகெல்லானிக் பென்குயின்
(magellanic penguin)





ஆப்ரிக்கன் பென்குயின்
(African penguin)

ஆப்பிரிக்கா




ஆஸ்திரேலியா



லிட்டில் பென்குயின்
(little)

நீரிலும் நிலத்திலும் வாழ்கின்ற பறக்க முடியாத பறவை பென்குயின் ஆகும். பென்குயின்களால் பறக்கமுடியாது. ஏனென்றால் பென்குயின்களுக்குச் சிறகுகள் கிடையாது. ஆனால் நீரில் வேகமாக நீந்தும்.



நீந்துவதற்கு

ஏற்ப


தட்டையான

கை (flipper)

போன்ற

உறுப்பு

இருக்கும்.



மணிக்கு பன்னிரெண்டு கிலோ மீட்டர் தூரம் வரை நீந்தும். மேலும் இருபது நிமிடம் வரை நீருக்குள் இருக்கும்.



flipper

பென்குயின்களுக்குப் பற்கள் கிடையாது. ஆனால் உணவை உண்பதற்கு ஏற்ப வாயினுள் ரம்பம் (serracted) போன்ற அமைப்பு இருக்கும். இதன் மூலம் பென்குயின்கள் உணவினை உண்ணுகின்றன.



வாயின் உட்பகுதி

பென்குயின்களின் முக்கிய உணவு கிரில் (Krill), இறால் (Prawn), ஸ்ரிம்ப் (Shrimp) போன்ற சிறிய கடல்வாழ் மீன் ஆகும். மேலும் மீன், நண்டு, ஆக்டோபஸ் ஆகிய உயிரினங்களையும் உண்ணுகின்றன.



கிரில்
(Krill)



இறால்
(Prawn)



ஸ்ரிம்ப்
(Shrimp)



நண்டு



ஆக்டோபஸ்

பென்குயின்கள் கூட்டமாக வாழும். பென்குயின் இனங்களில் எம்பரர் பென்குயின் (Emperor penguin) பெரியது.



எம்பரர் பென்குயின்
(Emperor penguin)

பென்குயின்களின் கருப்பு வெள்ளை நிறம் இயற்கையாவே தன்னை வேட்டையாட வரும் உயிரினங்களிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் விதமாக அமைந்துள்ளது.


கடலில் நீரின் ஆழத்தில் நீந்தும் போது இதன் கருப்பு நிறம் நீரின் மேற்பரப்பில் உள்ள உயிரினங்களிடம் இருந்தும், நீரின் மேற்பரப்பில் நீந்தும் போது நீரின் ஆழத்தில் உள்ள உயிரினங்களிடம் இருந்தும் தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கு அமைந்துள்ளன.



இருப்பினும் நிலத்தில் பென்குயின்கள் நீர்நாயால் (Otter) வேட்டையாடப்படுகின்றன. பென்குயினின் வாழ்நாள் சராசரியாக பத்து முதல் இருபது ஆண்டுகள் ஆகும். வேட்டையாடுதல் மற்றும் இயற்கைப் பேரழிவு காரணமாக இதன் வாழ்நாள் குறைகின்றன.



பென்குயின்களின் உடல் அமைப்பு மற்றும் காலநிலையால் வருடம் ஒருமுறை அதன் மொத்த முடிகளும் உதிர்கின்றன. உதிர்ந்த முடிகள் மீண்டும் வளர மூன்று வாரங்கள் வரை ஆகலாம். இக்காலக் கட்டத்தில் (Moult) பென்குயின்களால் நீந்தவோ மீன்களைப் பிடிக்கவோ முடியாது. இதனைப் “பேரழிவுக் காலம்” என்று ஆய்வாளர்கள் கூறுவர்.





பென்குயின்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கக் கூடிய உயிரினம். பிறந்து மூன்றில் இருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் இனப்பெருக்கத்திற்குத் தயாராகின்றன.










www.worldtamilacademy.com

பென்குயின் தன் இனப்பெருக்கக் காலத்திற்கு முன்பே முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதற்கு இடத்தைத் தேர்ந்தெடுக்கின்றன. மேலும் பென்குயின் தன்னுடைய இணைக்குக் கற்களைப் பரிசாகக் கொடுக்கின்றன. இக்கற்கள் இனப்பெருக்கக் காலத்தில் முட்டைகளை அடைகாக்கப் பயன்படுகின்றன.




பென்குயின்களில் மொத்தம் பதினேழு வகைகள் உள்ளன. ஒவ்வொறு வகை பென்குயின்களையும் அதன் உயரம், எடை, நிறம், அலகு (bill) மற்றும் தலைமுடியை வைத்து வேறுபடுத்தலாம்.



| பெங்குயின் வகைகள் | வசிப்பிடம் | தோற்றம் | உயரம் மற்றும் எடை |
| --- | --- | --- | --- |
| எம்பரர் (emperor) பெங்குயின்  | அண்டார்டிகா | தலை மற்றும் பின் பகுதி– கருப்பு நிறம், காது – அடர்ந்த மஞ்சள் நிறம் அலகு அடிப்பகுதி (bill ) – அடர் மஞ்சள் | 121 செ.மீ 22 – 48 கிலோ கிராம் |
| கிங்( king ) பெங்குயின்  | அண்டார்க்டிக் வடக்குப் பகுதி | கருப்பு முதுகுகள், வெள்ளை நிற வயிற்றுப் பகுதி. அடர்ந்த ஆரஞ்சு நிறம். காது மற்றும் கழுத்துக்குக் கீழ் பகுதியிலும், அலகின் (bill) கீழ் பகுதியிலும் உள்ளன | 70 – 100 செ.மீ 9 ––17 கிலோ கிராம் |


| பென்குயின் வகைகள் | வசிப்பிடம் | தோற்றம் | உயரம் மற்றும் எடை |
|---|---|---|---|
| லிட்டில் பென்குயின் (little)  | நியூசிலாந்து | தலை மற்றும் முதுகுப் பகுதி கரு நீல நிறம். காதுப்பகுதி சாம்பல் நிறம். வயிற்றுப் பகுதி வெள்ளை நிறம் உடையது | 121 செ.மீ 22 – 48 கிலோ கிராம் |
| சௌத்தர்ன் ராக்ஹாப்பர் பென்குயின் (Southern Rockhopper Penguin  | மேற்குப் பசிபிக், சபண்டார்க்டிக் தீவு, தென் அமெரிக்கா | முதுகுப் பகுதி கருப்பு. வயிற்றுப் பகுதி வெள்ளை. சிவப்பு கண்கள். மஞ்சள் நிற புருவத்துடன் மேல் நோக்கிய கருப்பு நிற முடிகள். கால்கள் இளஞ்சிவப்பு நிறம் | 45 – 58 செ.மீ 23.4 கிலோ கிராம் |


| பெண்குயின் வகைகள் | வசிப்பிடம் | தோற்றம் | உயரம் மற்றும் எடை |
|---|---|---|---|
| மாக்கரோனி பெண்குயின் (Macoroni penguin)  | அண்டார்க்டிக் (Antarctic), அட்லாண்டிக் (Atlantic), இந்தியப் பெருங்கடலின் சபாண்டார்டிக் (Subantarctic) தீவில் உள்ள சிலி (Chile) மற்றும் அர்ஜென்டினா (Argentina) கடற்கரை | தலை மற்றும் முதுகுப்பகுதி கருப்பு நிறம், வயிற்றுப் பகுதி வெள்ளை நிறம். மஞ்சள் நிறப் புருவம் முடியைப் போல் நீண்டு உள்ளது. கண் அடர் காப்பி (brown) நிறம், பில் (bill) வெளிர் காப்பி நிறம் | 70 செ.மீ 3 – 5.5 கிலோ கிராம் |
| பியர்ட்லேண்ட் பெண்குயின் (Fiordland penguin)  | நியூசிலாந்து (New Zealand) ஸ்டீவர்ட் தீவு (Steaward) | அடர்ந்த சாம்பல் நிற முதுகு, வெள்ளை நிற வயிற்றுப் பகுதி. மஞ்சள் நிறப் புருவம் அகலமாகக் கண்ணின் மேல் வரை சென்று கழுத்தின் கீழ் வரை நீண்டுள்ளது | 60 செ.மீ 3 – 5 கிலோ கிராம் |

| பெங்குயின் வகைகள் | வசிப்பிடம் | தோற்றம் | உயரம் மற்றும் எடை |
|---|---|---|---|
| ஸ்நேர்ஸ் பெங்குயின் (snares penguin)  | ஸ்நேர்ஸ் தீவு (snares island, new zealand) | கருப்பு வெள்ளை முதுகு. சிவப்பு நிறக் கண்கள். பியர்ட்லேண்ட் பெங்குயின் இனத்துடன் தொடர்புடையது. பில்லின் அடிப்பகுதியில் இளஞ்சிவப்பு நிறம் மூலம் வேறுபடுகிறது | 50 – 70 செ.மீ 2.5 – 4 கிலோ கிராம் |
| ராயல் பெங்குயின் (Royal penguin)  | மக்குவாரி தீவு (Macquarie Island) | கருப்பு முதுகு, வெள்ளை நிற முகம் மற்றும் வயிற்றுப் பகுதி. புருவங்கள் கருப்பு, மஞ்சள் மற்றும் அடர் மஞ்சளுடன் நீண்டும், . இதன் அலகினைச் (bill) சுற்றி வெளிர் மஞ்சள் படிந்தும் உள்ளது | 65 – 76 செ.மீ 5 – 6 கிலோ கிராம் |

| பென்குயின் வகைகள் | வசிப்பிடம் | தோற்றம் | உயரம் மற்றும் எடை |
|---|---|---|---|
| எரெக்ட் க்ரெஸ்டட் பென்குயின் (Erect Crested Penguin )  | பவுண்டி (bounty) மற்றும் ஆன்டிபோட்ஸ் (antipodes) தீவு | கருப்பு முதுகு வெள்ளை நிற வயிற்றுப் பகுதி, மஞ்சள் நிற கண்பட்டைப் புருவம் வளைந்து மேல் நோக்கி நீண்டு செல்லும் | 61 – 67 செ.மீ 6-13 கிலோ கிராம் |
| மஞ்சள் கண்கள் கொண்ட பென்குயின் (Yellow Eyed Penguin)  | ஸ்டீவர்ட் தீவு (Stewart), ஆக்லாந்து தீவு (Auckland), காம்ப்பெல் (Campbell Island) தீவு, ஒடாகோ (Otago) | தலை, கன்னம், முதுகு வெளிர் சாம்பல் நிறம். வயிற்றுப் பகுதி வெள்ளை நிறம். தலையில் கிரீடம் போல் மஞ்சள் நிற கோடு ஒன்று. கால்கள் இளஞ்சிவப்பு நிறம் உள்ளன | 61–73 செ.மீ 5–6 கிலோ கிராம் |

| பென்குயின் வகைகள் | வசிப்பிடம் | தோற்றம் | உயரம் மற்றும் எடை |
|---|---|---|---|
| அடேலி பென்குயின் (adelie penguin)  | அண்டார்க்டிக் (Antarctic) | கருப்பு வெள்ளை நிறக் கண்கள். தலை, கன்னம் மற்றும் முதுகுப் பகுதி கருப்பு. வயிற்றுப் பகுதி வெள்ளை நிறம் | 70 – 73 செ.மீ 3 – 8 கிலோ கிராம் |
| சின்ஸ்ராப் பென்குயின் (chinstrap penguin)  | தெற்குப் பசிபிக் (South pacific) அண்டார்டிக் (Antarctic) | தலை, முதுகு மற்றும் அலகுப்பகுதி (bill) அடர் கருப்பு நிறம். அலகிற்குக் கீழ் நாடிப் பகுதியில் உள்ள கருப்பு நிறக் கோடு தலையில் தொப்பி அணிந்து இருப்பது போன்று தோற்றம் அளிக்கிறது. கால்கள் இளஞ்சிவப்பு நிறம் உடையன. | 68 – 76 செ.மீ 3–5 கிலோ கிராம் |

| பெங்குயின் வகைகள் | வசிப்பிடம் | தோற்றம் | உயரம் மற்றும் எடை |
| --- | --- | --- | --- |
| ஜென்டூ பெங்குயின் (gentoo penguin)  | அண்டார்டிக் (Antarctic) | கருப்பு வெள்ளை உடல், ஆரஞ்சு சிவப்பு நிற அலகு(bill) மற்றும் கால்களும் கொண்டுள்ளன | 70 – 90 செ.மீ 4–8 கிலோ கிராம் |
| ஆப்ரிக்கன் பெங்குயின் (African penguin)  | தெற்கு ஆப்ரிக்கா (South Africa) | கருப்பு நிற முதுகு, வெள்ளை உடல், கண்களுக்கு மேல் இளஞ்சிவப்பு பட்டையும், கருப்பு நிற கால்களும் உள்ளன. முகத்தில் உள்ள வெள்ளை நிறப் பட்டையால் இதன் அலகினைச்(bill) சுற்றியுள்ள கருப்பு நிறம் முகமூடி அணிந்துள்ளது போல் உள்ளது | 60 – 70 செ.மீ 2 – 3 கிலோ கிராம் |

| பெங்குயின் வகைகள் | வசிப்பிடம் | தோற்றம் | உயரம் மற்றும் எடை |
|---|---|---|---|
| ஹம்போல்ட் பெங்குயின் (Humboldt penguin)  | தென் அமெரிக்காவில் (south africa) ஹம்போல்ட் (humboldt) கடற்கரையில் வாழ்கின்றன | கருப்புக் காதுகள், கருப்புத் தலை, கருப்பு சாம்பல் மேல் பகுதி மற்றும் வெண்மையான வயிற்றுப்பகுதியும் உடையது. கழுத்துக்குக் கீழ் வெண்மை நிறமும் அதன் கீழ் யூ (U) வடிவ அடர்ந்த கருப்பு நிறப் பட்டையும் உள்ளது. | 50 – 70 செ.மீ 6 – 13 கிலோ கிராம் |
| கலபகோஸ் பெங்குயின் (Galapagos penguin)  | கலபகோஸ் (Galapagos) தீவுகள் மற்றும் ஈக்வடார் (Ecuador) நாடு | கருப்பு முதுகு, வெள்ளை நிற வயிற்றுப் பகுதி, கருப்பு காதுகள், கன்னத்தை சுற்றி வெள்ளைப் புள்ளிகள், கருப்பு நிற அலகுகள் (bill) அதன் கீழ் இளஞ்சிவப்பு நிறம் சிறிது படர்ந்திருக்கிறது | 48 – 50 செ.மீ 2 – 4 கிலோ கிராம் |

## பென்குயின் வகைகள்

மாகெல்லானிக் பென்குயின் (magellanic penguin)



## வசிப்பிடம்

தென் அமெரிக்கா (sounth america)


## தோற்றம்

கருப்பு முதுகு, வெள்ளை நிற வயிற்றுப் பகுதி, தலை மற்றும் மார்புக்கு இடையில் இரண்டு கருப்புப் பட்டைகள் முதுகுடன் இணைகிறது . தலை, கன்னம், தொண்டை கருப்பு நிறமாக உள்ளது. கண்ணிற்கு மேல் வெள்ளை நிறமும், அலகுப்பகுதி (bill) கருப்பு நிறமும் உடையது.

## உயரம் மற்றும் எடை

61–76 செ.மீ
2.5–7 கிலோ கிராம்

அண்டார்டிகா என்றதுமே முதலில் நம் நினைவுக்கு வருவது பென்குயின்கள். வெள்ளை சட்டையும் கருப்பு கோர்ட்டும் அணிந்தது போன்ற தோற்றம் உடைய பென்குயின்கள் பனிப்பிரதேசங்களுக்கே உரிய தனித்துவமான விலங்காக உள்ளது.



கார்பன் - டை ஆக்சைட் அதிகமாக வெளிவருதல் மூலம் புவிவெப்பமடைந்து அண்டார்டிகாவில் பனிமலைகள் உருகி கடல்மட்டம் பெருகி வருகின்றன.



பனிமலைகள் உருகுவதால், வருடத்திற்கு ஒன்று இரண்டு முட்டைகளை மட்டுமே இடுகின்ற பென்குயின்களின் முட்டைகள், உயிர் பெறாமலே அழிவுக்கு உள்ளாகின்றன. இதனால் பென்குயின் இனங்கள் அழிவினை நோக்கிச் செல்கின்றன. இந்த அற்புதமான பறவைகளைப் பாதுகாக்க, ராஸ் தீவில் அமைந்துள்ள அமெரிக்கா ஆராய்ச்சி நிறுவனமான எம்சி மர்டோ (McMurdo) ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் இருபத்து ஐந்தாம் (25) நாள் உலக பென்குயின் தினமாக அனுசரித்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



# பென்குயின்











உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com